**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 50/2022**

**Date** :11.03.2026

**பி. வா.சா1- சொர்ணகுமார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் GST அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக நான் ஒரு மகேந்திரன் பைனான்ஸ் ல் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். மேற்படி நிதி நிறுவனத்தில் நான் கையாடல் செய்ததாக என்னை பணிநீக்கினார்கள் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்திற்கு நான் கடைசியாக எப்போது சென்றேன் என்றால் சுமார் 15 நாட்களுக்கு முன்.

வழக்கு பட்டிகை சொத்தில் செங்கல் சுடுவதற்கான 30 அடி உயரமான ஒரு அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் 30 அடி நீளமுள்ள அஸ்பெஸ்டாஸ் செட் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் வடக்கு பக்கம் 20 அடி நீளமுள்ள அஸ்பெஸ்டாஸ் செட் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமித்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தினை குறித்து எதிருரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் நான் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**